கட்டக்கூடிய நேரத்திலே குறைந்த அளவிலே செலவாகக்கூடிய இந்த அணையைக் கட்டாமல் தள்ளிப்போட்டதற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாலாற்றின் தண்ணீர் அதிகமாகப் பயன்படுகிறது. பாப்பிலே அதிகமாகப் பாசன வசதிகளுக்காகப் பயன்படுகிறது. இவற்றையெல்லாம் பரிசீலித்து அரசாங்கம் விரைவிலே நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, பாலாறுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாலாறு பேசின் விதி என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியை எடுத்துவிடுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த விதிபற்றி என்னைவிட கனம் உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும்.

*** 304 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள நெறிஞ்சிக்குடியாறு, கூடலூர் ஆறு, பாலாறு ஆகிய காட்டாறுகளின் குறுக்கே அணைகள் எழுப்பும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருமயம் வட்டம், நெய்வேலி கிராமத்தில் நெறிஞ்சிக் குடியாறின் குறுக்கே அணை எழுப்பும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. திருமயம் வட்டத்தில் கூடலூர் ஆறு, பாலாறு ஆகிய காட்டாறுகள் இல்லை.

(இ) இது உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பாறு என்பது பாலாறு என்று வந்து விட்டது. பாம்பாற்றின் குறுக்கே கைலாசபுரம் என்னுமிடத்திலே அணை கட்டப்பட இருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேப்போல பாம்பாற்றின் குறுக்கே வாளரமாணிக்கம், சொகவபட்டி, ஏற்றநாடு, இரும்பாநாடு, சித்தாகூர் ஆகிய இடங்களில் அணைகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கின்ற நிலைமை இருப்பதாலே இவைகளினுடைய இன்றியமையாத் தேவையைக் கருதி அவற்றைக் கட்டி முடிக்க உடனடியாக முடித்துத் தா அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒப்புதல் அளிக்கக் கூடிய நிலைமை இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கேள்வியிலேயே பாலாறு என்றுதான் இருக்கிறது.

மதுரை மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*305 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்ட கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டி லிமிடெட்டின் போர்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஸ்பெஷல் அதிகாரி நியமனத்திற்குப் பின் சொசைட்டியின் வியாபாரம் அபிவிருத்தி அடைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) பொதுவாக வளர்ச்சி காணப்படுகிறது.

வட ஆற்காடு மத்திய கூட்டுறவு வங்கியின் குழு

*306 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய பேங்கு போர்டைக் கலைக்க நோட்டீஸ் எப்பொழுது எதற்காக கொடுக்கப்பட்டது ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையிலே 'மன நிறைவுதரும் வகையில் நடக்கவில்லை. கடன் தொகையை ஆராய்தல், அதற்கு ஒப்பளிப்பு வழங்கல், கடன் வழங்கல் ஆகியவை குறித்துக் கடுமையான முறைகேடுகள் நடந்ததாகத் தெரிய வந்துள்ளது' என்று இருப்பதுபோல் இது எல்லாம் கண்டுபிடித்ததற்குப் பிறகு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றாலும் நீதிமன்றத்திற்குப் போனதற்குப் பிறகு அது நேர் விரோதமான முறையிலே தவறு செய்யக்கூடியவர்களுக்குச் சாதகமான முறையிலே தீர்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா, இங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா ?

---

*102–103-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.